## 5. அரசினர் தீர்மானம்

## 17–8–2016 அன்று அவைக்கு வந்திருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று ஒரு வார காலம் தற்காலிகமாக நீக்கி வைத்தல்

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“பேரவை அலுவல்களை நடைபெறவிடாமல் இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக, அவையில் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121, உள் விதி (2)–ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை இன்றிலிருந்து ஒருவார காலம் பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும்”*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இன்றிலிருந்து ஒருவார காலத்திற்கு பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18–8–2016) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1–10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*